ما يفعله

# الحاج والمعتمر

# ஹஜ் உம்ரா விதிமுறைகள்.

باللغة التاميلية

كتبها

أحد طلبة العلم

ترجمها

عبد الرحمن عبد الرزاق

தமிழில்
அப்துர் ரஹ்மான் அப்துர் ரஸ்ஸாக்

COOPERATIVE OFFICE
FOR
CALL & GUIDANCE AT SHIFA
RIYADH-11418.
TLE.4222626-4200620

بسم الله الرحمن الرحيم

எல்லாப் புகழும் எல்லாம் வல்ல இறைவ னுக்கே உரித்தாகட்டும். சாந்தியும் கருணையும் இருதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்கள் குடும்பத்தினர், தோழர்கள் யாவர் மீதும் உண்டாவதாக.

இஸ்லாமிய சகோதரர்களே! ஹஜ் செய்யும் நாம் பின்வரும் வகைகளில் ஒன்றில் நிய்யத் செய்து கொள்ள வேண்டும்.

## இஹ்ராம் முறை.

1. தமத்து.'.. மீகாத் எல்லைக்குச் சென்றதும், உம்ராவிற்க்கு மாத்திரம் லப்பைக்க உம்ரதன் எனக்கூறி, இஹ்ராம் கட்டி மக்கா சென்று உம் ராவை முடித்து விட்டு, இஹ்ராம் ஆடையை கலைந்து விடலாம். பின்பு தானிருக்கும் இடத் திலிருந்தவாரே எட்டாம் நாளில் லப்பைக்க ஹஜ் ஜன் எனக்கூறி ஹஜ்ஜுக்காக இஹ்ராம் கட்டி அதனது கடமைகளை செய்ய வேண்டும். இந்த வகையில் ஹஜ்செய்பவர் குர்பானியும் கொடுக்க வேண்டும்.

2. இப்ராத். இது மீக்காத் எல்லைக்குச் சென்ற தும் ஹஜ்ஜுக்கு மாத்திரம் லப்பைக்க ஹஜ்ஜன் எனக்கூறி நிய்யத் செய்து மக்கா சென்று சுன் னத்தான தவாபுல்குதூம் எனும் தவாபை செய்து விட்டு, இஹ்ராமுடனே பத்தாம் நாள் வரையும் இருந்து, எட்டாவது நாளிலிருந்து செய்ய வேண் டிய ஹஜ்ஜின் கடமைகளை செய்ய வேண்டும் இவ்வகையில் ஹஜ் செய்பவருக்கு குர்பானி அவசிய மில்லை.

3. கிரான். இது(மீக்காத்)எல்லைக்கு சென்றதும், ஹஜ்ஜுக்கும் உம்ராவுக்குமாக லப்பைக்க ஹஜ் ஜன் வஉம்ரதன் என நிய்யத் செய்து கொள்ள வேண்டும். பின்பு மக்கா சென்று தவாபுல் குதூம் எனும் தவாபை செய்து விட்டு ஸபா மர்வாவுக்கு வந்து, ஹஜ்ஜையும் உம்ராவையும் நினைத்த வனாக சயீ செய்ய வேண்டும். மேலும் இந்த சயீயை ஹஜ்ஜுடைய தவாபுக்குப்பின் செய்ய வும் பிற்படுத்திக் கொள்ளலாம். எனினும் தவா புல் குதூமுக்கு பின்னால் செய்வதுதான் சிறப் பானது. இந்த வகையில் ஹஜ் செய்பவர்

இஹ் ராமுடைய ஆடையை கலையாமல் பத்தாம் நாள் வரை இருந்து ஹஜ்ஜுடைய கடமைகளை செய்ய வேண்டும். மேலும் குர்பானியும் கொடுக்க வேண்டும்.

## உம்ரா ஹஜ்ஜினது விதிமுறைகள்.

### உம்ரா செய்யும் முறை.

1. உம்ரா செய்யும் ஒருவன் தனது ஆடைகளை கலைந்து குளித்து நறுமனங்கள் பூசி தன் னிடத்திலுள்ள எண்ணைகளில் எதனையாவது தனது தலையிலும், தாடியிலும் தடவிக் கொள்ள வேண்டும்.

2. குளித்ததன்பின் இஹ்ராம் ஆடையை அணிந்து லப்பைக்க உம்ரதன் என்று நிய்யத் செய்து கொள்ள வேண்டும். ஆணாயிருந்தால் சப் தத்தை உயர்த்தியும், பெண்ணாயிருந்தால் தனக்கு மட்டும் கேட்குமாறும் பின்வரும் தல்பியாவை கூற வேண்டும். லப்பைக் அல்லா ஹும்ம லப்பைக் லப்பைக் லாஷரீக் கலக் லப்பைக் இன்னல் ஹம்த வன்னி.ஃ.மத லக வல் முல்க் லா ஷரீக்கலக்.

3. தனக்கு ஏதாவது இடையூருகள் ஏற்பட்டு தன் னால் அக்கடமையை பூரணமாக நிறைவேற்ற முடியாமல் போய்விடும் என்று ஒருவன் பயந் தால், அவன் நிய்யத் வைக்கும்போதே தனக்கு இடையூரு ஏற்படுமிடத்து நான் வணக் கத்திலிருந்து நீங்கி விடுவேன் என்று நிய்யத் செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்து கொண்டால் அவனுக்கு இடையூரு ஏற்படுமி டத்து, வணக்கத்திலிருந்து விலகிக் கொள்ள லாம். அவன் அதற்காக (குர்பானி) பலி கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

4. மக்காவை அடைந்து விட்டால், வலது காலை முன் வைத்து பிஸ்மில்லாஹி வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரஸுலில்லாஹ் அல்லா ஹும்மப்தஹ்லி அப்வாப ரஹ்மத்திக் அஊது பில்லாஹில் அழீம் வபி வஜ்ஹிஹில் கரிம் வபி ஸுல்தானிஹில் கதீம் மினஷ் ஷைத்தா னிர் ரஜீம். என்று கூறியவாறு வலது காலை முன் வைத்து க.ஃ.பத்துல்லாவுக்குல் நுழைந்து, தவாபை ஆரம்பிக்க

ஹஜருல் அஸ்வத் கல் லின் பக்கம் சென்று, அதை தொட்டு முத்த மிட முடியுமென்றால் தொட்டு முத்தமிடுவதும், முடியாதவர் அதன் பக்கம் திரும்பி கையால் சைகை செய்வதும் சுன்னத்தாகும். அவ்வாறு சைகை செய்தவர் தனது கையை முத்தமிட வேண்டிய அவசியம் இல்லை. மேலும் அக் கல்லை முத்தமிடச் செல்லும்போது மனிதர்க ளுக்கு இடைஞ்சல் கொடுக்கலாகாது. அக் கல்லை தொடும்போது, பிஸ்மில்லாஹி வல் லாஹு அக்பர் அல்லாஹும்ம ஈமானம் பிக்க வதஸ்தீக்கன் பிகிதாபிக்க வவபாஅன் பிஅஹ் திக்க வத்திபாஅன் லிஸுன்னத்தி நபிய்யிக்க முஹம்மதின் (ஸல்) என்று கூறிக்கொள்ள வேண்டும்.

5. க.ஃ.பாவை இடது புறமாக வைத்து தவாபை ஆரம்பிக்க வேண்டும். ருக்னுல் யமானி எனும் கல்லை அடைந்து விட்டால் அதனை முத்த மிடாமல் தடவிக்கொள்ள வேண்டும். அது முடியாவிட்டால் மக்களை நெருக்கி அவர்க ளுக்கு இடைஞ்சல் கொடுக்கக் கூடாது. அந்த இரண்டு கற்களுக்குமிடையில், றப்பனா ஆதினா பித் துன்யா ஹஸனத்தன் வபில் ஆகிரத்தி ஹஸனத்தன் வகினா அதாபன்னார். என்று ஓதிக்கொள்ள வேண்டும். ஹஜருல் அஸ்வத் கல்லுக்குப் பக்கத்தால் செல்லும் போதெல்லாம் அதற்கு கையசைத்து தக்பீர் சொல்லிக்கொள்ள வேண்டும். ஏனைய தவாபு களில் தான் நினைத்தவாறு குர்ஆனையோ அல்லது வேறு ஏதாவது திக்ருகளையோ ஓதிக் கொள்ளலாம்.

6. முதலாவதாக செய்யும் தவாபான தவாபுல் குதூமை செய்யும்போது இரண்டு விஷயங் களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

- தவாப் முடியும்வரை இல்திபா.ஃ. எனும் வகை யில் தனது இஹ்ராம் ஆடையை இடது கைப் பாகத்தை மூடி வலது கையின் கீழால் வைத்து அணிந்து கொள்ள வேண்டும். தவாபை முடித்துக் கொண்டதும், முன்பு போலவே இஹ்ராம் ஆடையை அணிந்து கொள்ள வேண்டும். மேற்கூறிய முறையை தவாபில் மட்டுமே செய்ய வேண்டும்.

- முதலாவது மூன்று தவாப்களிலும் மெதுவாக ஓடிக்கொள்ள வேண்டும்.

7. ஏழு முறை தவாப் செய்து முடித்து விட்டால் மகாமுல் இப்ராஹீம் எனும் இடம் வந்து வத்த ஹிதூ மின் மகாமி இப்ராஹீம முசல்லன் எனும் வசனத்தை ஓதிக்கொள்ள வேண்டும். பின் அந்த இடத்தில் இரண்டு ரக்அத் சுன்னத் தொழுது கொள்ள வேண்டும். அதிலே குல் யா அய்யுஹல் காபிருன் குல்ஹுவல்லாஹு அஹத் எனும் இரு சூராக்களை ஓதிக் கொள் வது நபி வழியாகும்.

8. ஸபா மலைக்கு சென்று இன்னஸ் ஸபா வல் மர்வத்த மின் ஷஆஇரில்லா பமன் ஹஜ்ஜல் பைத்த அவி.்.தமர பலா ஜுனாஹ அலைஹி அன் யத்தவ்வப பிஹிமா வமன் ததவ்வஅ கைரன் இன்னல்லாஹ ஷாகிருன் அழீம். எனும் வசனத்தை ஓதிக்கொள்ள வேண்டும். பின் க.்.பா தெரியும் வகையில் ஸபா மலை மேல் ஏறி தான் விரும்பும் திக்ர் துஆக்களை ஓதிக்கொள்ளலாம். நபி (ஸல்) அவர்கள் பின் வரும் துஆவை ஓதியிருக்கின்றார்கள். லாஇ லாஹ இல்லல்லாஹு, வஹ்தஹு லா ஷரீக் கலஹு, லஹுல் முல்கு வலஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு, அன்ஜஸ வ.்.தஹு, வனசர அப்தஹு, வஹஸமல் அஹ் ஸாப வஹ்தஹ். இதனை மூன்றுமுறை ஓது வது சிறந்ததாகும். வேறு துஆக்களையும் அவைகளுக்கிடையில் கேட்டுக் கொள்ளலாம்.
9. பின் ஸபா மலையிலிருந்து இறங்கி மர்வாவின் பக்கம் நடந்து சென்று பச்சை அடையாளம் வந்ததும், அதற்கிடையில் மெதுவாக ஒடி, அதனை கடந்து விட்டால் முன்பு போல் நடந்து செல்ல வேண்டும். இதே போன்று ஏழு முறை செய்து கொள்ள வேண்டும் இவ்வாறு சயீ செய்யும்போது தனக்கு தெரிந்த குர் ஆனையோ துஆக்களையோ ஓதிக் கொள்ள லாம். ஏழுமுறை சயீ செய்து முடித்து விட்டால் ஆண்கள் தமது தலை முடியை பூரணமாக சிரைக்கவும் அல்லது கத்தரிக்கவும் வேண்டும்.

பெண்கள் விரல் நுனியளவு கத்தரிக்க வேண் டும். ஆண்களுக்கு கத்தரிப்பதை விட சிரைப் பதே ஏற்றதாகும்.

## ஹஜ்ஜின் விதி முறைகள்.
## ஹஜ்ஜின் ருக்குன்கள்.

எல்லையில் (மீகாத்) இஹ்ராம் செய்தல். அர பாவில் தங்குதல். பெருநாள் தினத்தன்று ஹஜ் ஜுக்காக தவாப் செய்தல். ஸபா மர்வாவிற்க்கிடை யில் ஓடுதல் போன்றவைகளாகும்.

## ஹஜ்ஜின் கடமைகள்.

எல்லையில் (மீகாத்தில்) இஹ்ராம் செய்தல். சூரியன் மறையும்வரை அரபாவில் தங்குதல். பல வீனர்களையும், பெண்களையும் தவிர அதிகாலை நன்கு வெளுக்கும்வரை முஸ்தலிபாவில் தங்குதல். பலவீனர்களும், பெண்களும் நள்ளிரவு வரை தங் குதல். தஷ்ரீக்குடைய மூன்று நாட்களான 11,12, 13,ஆம் நாட்களின் இரவுகளில் மினாவில் தங்கு தல் தஷ்ரீக்குடைய நாட்களில் கல் எறிதல். தலைமுடியை சிரைத்தல், அல்லது தலை முழவது மாக குறைத்தல். தவாபுல் வதா.'. எனும் கடை சித் தவாபு செய்தல்.

மேற்கூறப்பட்ட ருக்குன்களில் ஒன்றை விட்ட வர் அதை செய்யும்வரை அவரது ஹஜ் பூர்த்தி யாக மாட்டாது. கடமைகளில் ஒன்றை விட்டவர் தான் விட்ட அந்த கடமைக்காக குர்பானி (பலி) கொடுத்து பூர்த்தி செய்து கொள்ளலாம்.

## இஹ்ராமில் தடுக்கப்பட்டவைகள்.

இஹ்ராம் ஆடையை அணிந்து கொண்ட ஒரு வர் பின்வரும் விஷயங்களிலிருந்து தன்னை பாது காத்துக் கொள்ள வேண்டும்.

வாசனைத் திரவியங்கள் உபயோகிப்பது இதில் வாசனையுள்ள சோப்புகளும் அடங்கும். மேனியிலுள்ள முடிகள் நகங்கள் போன்றவற்றை வெட்டுதல். தலையை ஒட்டியிருக்கும் வகையில் துணிகொண்டு மூடுதல். வேட்டையாடுதல். ஊடலு

றவு கொள்ளல். அல்லது உடலுறவைத் தூண்டும் வகையில் முத்தமிடல். அல்லது கட்டியணைத்தல். திருமண உடன்படிக்கை செய்தல். தைத்த ஆடை களை அணிதல். மக்காவிலுள்ள மரங்களில் ஏதா வதொன்றை வெட்டுதல்.

## எட்டாம் நளிலிருந்து செய்யும் கிரியைகள்.

## துல் ஹஜ் எட்டாம் நாள்.

- ஹாஜி இருக்கும் இடத்திலிருந்தவாறு ஹஜ் ஜுக்குரிய இஹ்ராமை கட்டிக் கொள்ளல்.
- தமத்து.ஃ. முறையில் ஹஜ் செய்ய விரும்புப வர் குளித்து சுத்தமாகி, நகங்கள் வெட்டி, மேல் மீசையை கத்தரித்து, மர்மஸ்தான முடி களை சிரைத்து, வெள்ளை துணிகளை அணிந்து கொள்வது சிறந்ததாகும். பெண்கள் முகமூடி, கைமூடி, போன்றவைகளைத் தவிர வேறு எதனையும் அணிந்து கொள்ளலாம்.
- இஹ்ராம் கட்டிய பின் அத்துணியால் இரண்டு தோற்புயங்களையும் மறைத்துக் கொள்வது சுன்னத்தாகும்.
- லப்பைக்க ஹஜ்ஜன் என்று நிய்யத் செய்து கொள்ளல்.
- தனக்கு ஹஜ்ஜுடைய கடமைகளை செய்ய முடியாதவாறு ஏதாவது இடையூருகள் ஏற்படும் என பயப்படும் பட்ச்சத்தில் அதற்கேற்றவாறு முன்பு கூறியது போன்று நிய்யத் செய்து கொள்ளல்.
- பத்தாம் நாள்வரை அதிகதிகமாக தல்பியா சொல்லிக் கொள்ளல்.
- தல்பியா சொல்லிய வன்னம் மினாவுக்குச் சென்று அங்கே ளுகர், அஸர், ம.ஃ.ரிப், இஷா போன்ற தொழுகைகளைத் தொழுதல். நான்கு ரக்அத்துக்களாக உள்ள தொழுகைகளை இரண்டு ரக்அத்தாக சுருக்கித் தொழுது கொள்ளல்.
- பஜ்ரின் சுன்னத், வித்ரு போன்றவைகளைத் தவிர ஏனைய சுன்னத்துக்களை தொழுவதை தவிர்த்துக் கொள்வது நபி வழியாகும்.
- நபி (ஸல்) அவர்கள் கற்றுத்தந்த திக்ருகளை அதிலும் முக்கியமாக காலை மாலை திக்ரு களை ஓதிக் கொள்ளல்.

- இந்த இரவை மினாவில் தரித்தல்.

## ஒன்பதாம் நாள் (அரபாவுடைய நாள்)

- அதிகாலை சூரிய உதயத்திற்குப் பின் தல் பியா சொல்லியவாறு அரபாவுக்குச் செல்லல்.
- இந்நாளில் நோன்பு நோற்ப்பது வெறுக்கப் பட்டதாகும்.
- முடியுமானவர் நமிரா என்ற இடத்துக்கு இறங் குவது நபிவழியாகும்.
- ளுகருடைய நேரத்தில் குத்பா பிரசங்கம் செய்து, சூரியன் நடுஉச்சியை விட்டும் நீங் கியதின்பின் ஒரு பாங்குடனும் இரு இகாமத்து டனும் ளுகரையும், அஸரையும் சேர்த்து சுறுக் கித் தொழுது கொள்ளல்.
- அரபாவுக்குள் பூரணமாக நுழைந்து விட்டோமா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- அரபாவில் எல்லா இடங்களிலும் இருந்து கொள்ளலாம். முடியுமென்றால் ரஹ்மா மலைக் கும் கிப்லாவுக்குமிடையில் இருந்து கொள் ளல். அம்மலைக்கு ஏறுவது நபிவழியாக மாட்டாது.
- அதிகமாக திக்ருகளில் ஈடுபட்டு அல்லாஹ் விடத்தில் இம்மை, மறுமை சம்பந்தப்பட்டவை களைக் கேட்டுப் பிரார்த்தித்துக் கொள்ளல்.
- லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு, லாஷ ரீக் கலஹு, லஹுல் முல்கு, வலஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர். எனும் திக்ரை அதிகமாக ஓதிக் கொள்ளல்.
- நபி (ஸல்) அவர்கள் மீது அதிகமாக ஸல வாத்துச் சொல்லிக் கொள்ளல்.
- சூரியன் நன்றாக மறைந்ததை உறுதி செய்து கொண்டு அரபாவை விட்டும் வெளியாகி முஸ் தலிபாவை நோக்கிச் செல்லல்.
- முஸ்தலிபாவை அடைந்ததும் மஃரிபையும், இஷாவையும் சேர்த்து சுறுக்கித் தொழுது கொள்ளல். அதன்பின் வித்ரைத்தவிர வேறு எத்தொழுகையையும் தொழாதிருத்தல்.

- பஜ்ர் வரை அங்கே உறங்குதல். பலஹீனமா னவர்களும், பெண்களும் நள்ளிரவிலே மினா வுக்குச் சென்று விடலாம்.

## பத்தாம் நாள். (பெருநாள்)

- பலஹீனமானவர்கள், பெண்கள்தவிர அனை வரும் முஸ்தலிபாவில் பஜ்ர் தொழுகையை தொழுது விட்டு கிப்லாவை முன்னோக்கி இம்மை, மறுமை சம்பந்தப்பட்டவைகளைக் கேட்டு பிரார்த்தித்தல்.
- சூரியன் உதிக்க முன் தல்பியாச் சொன்ன வாறு மினாவை நோக்கிச் செல்லல்.
- முஹஸ்ஸிர் எனும் ஓடையின் பக்கமாக செல் லும்போது விரைவாகச் செல்லல்.
- முஸ்தலிபாவிலோ மினாவிலோ ஏழு சிறு கற் களை எடுத்துக் கொண்டு பின்வருபவைக ளைச் செய்ய வேண்டும்.

1. ஏழு கற்களையும் தக்பீர் சொன்னவாறு ஜம்ர துல் அகபாவில்(மூன்றாவதில்)எறிதல்.
2. குர்பானி அறுத்து, அதிலிருந்து தானும் சாப் பிட்டு ஏழைகளுக்கும் கொடுக்க வேண்டும். இவ்வாறு குர்பானி கொடுப்பது கிரான், தமத் து∴. போன்ற முறையில் ஹஜ் செய்பவர்க ளுக்கு கட்டாயமாகும்.
3. தலை முடியை சிரைத்தல், அல்லது பூரண மாக குறைத்தல். பெண்கள் விரல் நுனிய ளவு கத்தரித்துக் கொள்ளல். மேற்கூறப் பட்ட வைகளை செய்வதின் மூலம் உடலுறவைத் தவிர தடுக்கப்பட்ட ஏனையவைகள் ஆகுமாகி விடுகின்றன.

## கல்லெறிதல், சிரைத்தல், தவாப் செய்தல்.

1. மக்கா சென்று ஹஜ்ஜுடைய தவாபை செய் தல். இதிலே முதலாவது மூன்று சுற்றிலும் ஓட வேண்டிய அவசியமில்லை. பின்பு இரண்டு ரக்அத் சுன்னத் தொழுது கொள்ளல்.
2. தமத்து∴. முறையில் ஹஜ் செய்பவரும், முன்பு சயீ செய்யாதவரும் சயீ செய்ய வேண்டும். இவைகள் அனைத்தையும் பூரணப்படுத்துவதன் மூலம் தடுக்கப்பட்டவைகள் அனைத்தும் ஆகு மாகி விடுகின்றன.

3. இவைகளை ஒன்றன்பின் ஒன்றாக செய்ய வேண்டிய அவசியமில்லை. சிலதை முற்படுத்தி யும், பிற்படுத்தியும் செய்யலாம்.
4. ஸம்ஸம் நீர் அறுந்திக் கொள்வதும், முடியு மானவர்கள் ளுகர் தொழுகையை மக்காவில் தொழுது கொள்வதும் சுன்னத்தாகும்.
5. ஏனைய இரவுகளை மினாவில் கழித்தல்.

## பதினோராம் நாள்.

- மினாவில் தங்கும் 11,12,13, ஆம் நாட்களில் ஐவேலை தொழுகையை ஜமாஅத்துடன் பேணித் தொழுதல்.
- அந் நாற்களைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியிருக்கின்றார்கள். தஷ்ரீக்கு டைய நாட்கள் உண்டு, குடித்து அல் லாஹ்வை தியாணிக்கக் கூடிய நாட்களாகும். (முஸ்லிம்) அந்நாட்களில் தொழுகைகளுக்குப் பின் அதிகமாக தக்பீர் சொல்லிக் கொள்வ தும், தான் செல்லும் பாதைகள், சந்தைகள் போன்ற இடங்களில் சொல்லிக் கொள்வதும் சிறந்ததாகும்.
- கல்லெறியும் இடங்களுக்குச் சென்று முதலா வது (சுக்ரா) எனும் சிறியதுக்கும் இரண்டா வது (வுஸ்தா) எனும் நடுத்தரமானதுக்கும் மூன்றாது (அகபா) எனும் பெரியதுக்குமாக மூன்று இடங்களுக்கும் ளுகர் தொழுகைக்குப் பின் கல் எறிதல்.
- ஒவ்வொறு கல்லையும் தக்பீர் சொன்னவாறு ஒன்றன் பின் ஒன்றாக எறிதல்.
- முதலாவதுக்கு கல் எறிந்ததன் பின் மக்கா வையும், மினாவையும் இடது புறமாகவும், மஸ்ஜிதுல் கைப்பை வலது புறமாகவும் வைத்து, கிப்லாவை முன்னோக்கி வலது புற மாக சற்று சென்று பிரார்த்தனை செய்து கொள்ளல்.
- இரண்டாவதுக்கு எறிந்ததன்பின் இடது பக்க மாக கிப்லாவை முன்னோக்கிச் சென்று பிரார்த்தித்தல்.
- மூன்றாவதுக்கு எறிந்ததன் பின் பிரார்த்த னைக்கு தாமதிக்காமல் சென்றுவிடல்.

- பகலில் கல் எறிய முடியாத போது இரவில் கூட எறியலாம். ஆனால் பகலில் எறிவதுதான் சிறப்பானது.
  - அன்றைய இரவை மினாவில் கழித்தல்.

### பண்ணிரண்டாம் நாள்.

- மினாவில் இருக்கும் நாட்களில் அதிகமாக திக்ர் செய்வதில் ஈடுபடல்.
- முதலாம் நாள் செய்தது போன்று ளுகர் தொழுகைக்குப் பின் மூன்று இடங்களுக்கும் கல் எறிதல்.
- கல் எறிந்தபின் தனது வணக்கத்தை பண் ணிரண்டாம் நாளுடன் முடித்துக் கொள்ள விரும்புபவர் சூரியன் மறையுமுன் மினாவை விட்டும் வெளியாகி மக்கா சென்று தவாபுல் வதா.ஃ. எனும் கடைசித் தவாபை செய்தல். மூன்றாம் நாள்வரை தங்கிச் செல்வது ஹாஜி களுக்கு சிறப்பானதாகும்.
- மினாவில் தங்கும் நாட்களில் மஸ்ஜித் கைப் பில் தொழுது கொள்வதும் சிறந்ததாகும்.

### பதிமூன்றாம் நாள்.

- முன்னய இருநாட்களிலும் செய்தது போன்று ளுகர் தொழுகைக்குப் பின் மூன்று இடங்க ளுக்கும் கல் எறிதல்.
- வணக்கத்தை முடித்துக் கொண்டவர்கள் மக்கா சென்று கடைசித் தவாபான தவா புல் வதாவை செய்தல். மாதவிடாய் பிரசவத் தீட்டு போன்றவைகளால் பீடிக்கப்பட்ட பெண் கள் தவாப் செய்யவேண்டிய அவசியமில்லை.

### முக்கிய குறிப்புக்கள்.

1. இஹ்ராம் ஆடையை அணிந்து அல்லாஹ்வை வணங்குவதற்கு ஆயத்தமாகிவிட்ட நாம், அவன் தடுத்த ஷிர்க்கானவைகள், வீண் பேச் சுக்கள் வீண் விலையாட்டுக்கள் போன்றவை களை தவிர்த்து, ஹராம் ஹலால் போன்ற வைகளில் பேணுதலாக இருந்து சிறந்த முறையில் தமது வணக்கங்களை செய்து முடிக்க முயற்சித்துக் கொள்ளல்.

2. அரபாவுடைய நாள் மகத்துவமிக்க நாளாகும். எனவே அந்நாளில் நாம் இம்மை மறுமை சம் பந்தப்பட்டவைகளில் எமக்காகவும், எமது பெற்றோர்கள் இஸ்லாமிய சகோதரர்களுக்காக வும் அல்லாஹ்விடம் அதிகதிகமாக பிரார்த்தித் துக் கொள்ளல்.
3. கற்களை ஒவ்வொன்றாக எறியும் போது முடியு மான அளவு அந்த எல்லைக்குள் விழும் வகையில் எறிந்து கொள்ளல். அதை தாண் டினாலும் தவரேதுமில்லை. ஒவ்வொறு இடத்தி லும் ஏழு கற்களுக்கு குறையாமலும் கூடாம லும் எறிந்து கொள்ளல்.
4. இஹ்ராம் கட்டியதன் பின் வாசனையுள்ள சோப்புகளால் கை கால் கழுவுவதை தவிர்ந்து கொள்ளல்.
5. தனக்கு குர்பானி கொடுக்க வசதியில்லாத போது, பதினோராம் நாளிலிருந்து மக்காவில் மூன்றும், ஊர் வந்து ஏழுமாக பத்து நோன்பு பிடித்துக் கொள்ளல். அவைகளை தொடர்ச் சியாக பிடிக்க வேண்டுமென்பது அவசிய மில்லை. மக்கா வாசிகளைப் பொறுத்தவரை யில் அவர்களுக்கு குர்பானி அவசியமில்லை.
6. ஹஜ்ஜுடைய நாட்களில் நாம் நல்ல முறை யில் நடந்து கொள்வதுடன், ஹஜ்ஜாஜிக ளுக்கு உதவிசெய்தும், அவர்களுக்கு இடைஞ் சல் கொடுக்காமலிருந்தும், எமக்கு அவர்க ளால் ஏற்படும் கஷ்டங்களை சகித்து, பொறு மையுடன் இருந்து கொள்ளவும் முயற்சித்துக் கொள்ளல்.
7. ஹாஜிகள் விரும்பியபோது தனது இஹ்ராம் ஆடையை மாற்றிக் கொள்ளவும், குளித்துக் கொள்ளவும் முடியும்.
8. மதினாவில் இருக்கும் நபியவர்களின் பள்ளி யில் தொழும் ஒவ்வொரு தொழுகைக்கும் ஆயிரம் தொழுகைகளின் நன்மைகள் இருப்ப தால், ஹஜ்ஜுக்கு முன்னோ, பின்னோ அங்கு சென்று தொழுவது சுன்னத்தாகும். அவ்வாறு சென்றவர் நபியவர்களதும், அவரது இரு தோழர்களதும், உஹதில் அடக்கப்பட்டிருக் கும் ஹம்சா (ரலி) அவர்களதும் கப்ருகளை தரிசித்து சலாம் கூறுவதும், பகீயில் அடக்கப் பட்டிருக்கும் ஏனைய சஹாபாக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சலாம் கூறி பிரார்த்திப்ப தும், குபா பள்ளி சென்று அங்கு இரு ரக் அத்து சுன்னத்து தொழுது கொள்வதும் சுன் னத்தாகும். மேலும் மேற்கூறப்பட்ட கப்றுகளை தரிசிக்கச் சென்றால் அவர்களிடத்தில் பிரார்த் திப்பதோ, பரிந்துரை வேண்டுவதோ

கூடாது அவ்வாறு செய்வது அல்லாஹ்வுக்கு மாறு செய்வதுடன் தனது நல்லமல்கள் அழிக்கப்படு வதற்கு காரணமாகவும் அமைந்து விடும்.

## ஹாஜிகள் செய்யும் சில தவறுகள்.

ஹாஜிகளும், உம்ரா செய்பவர்களும் செய் யும் சில தவறுகளை அவர்கள் தவிர்ந்து கொள்வ தற்காக சுட்டிக்காட்டுவது அவசியமாகும். அவை கள் பின்வருமாறு.

- வலது தோற்புயம் தெறியும் வகையில், இஹ் ராம் ஆடையை ஹஜ் முடியும்வரை அணிந்தி ருத்தல்.
- இஹ்ராம் கட்டிய பின், அல்லது அரபாவில், முஸ்தலிபாவில் சப்தமிட்டு தல்பியா சொல் வதை தவிர்த்துக் கொள்ளல்.
- தல்பியாவை ஒருவர் சொல்ல மற்றவர்கள் தொடர்ந்து கூட்டாகச் சொல்லல்.
- க.்.பாவை காணும்போது, அல்லது அதற்குள் நுழையும்போது குறிப்பான சில திக்ர் துஆக் களை ஓதுதல்.
- க.்.பாவை வலம் வரும்போது அல்லது சயீ செய்யும் போது குறிப்பானசில துஆக்களைக் கேட்டல்.
- தவாப் செய்யும்போது கூட்டாக அல்லது தனி யாக சப்தத்தை உயர்த்திப் பிரார்த்தித்தல்.
- ஸபா மலைக்கு ஏறும் போது க.்.பாவுக்கு கை யால் சைகை செய்தல்.
- ஸபா, மர்வா மலையில் இரண்டு அடையா ளங்களுக்குமிடையில் பெண்கள் ஓடுதல்.
- ஸபாவிலிருந்து மர்வாவுக்கும், மர்வாவிலிருந்து ஸபாவுக்கும் செல்வதை ஒன்றெனக் கணித் தல். அவை இரண்டாகும்.
- ஆண்கள் தலைமுடியில் சிலதை கத்தரித்தல்.
- அரபாவில் பிரார்த்திக்கும்போது கிப்லாவின் பக்கம் திரும்பாமலிருத்தல்.
- அரபா மலைக்கு ஏற முயற்சித்தல்.
- அரபா, மினா, முஸ்தலிபா போன்ற இடங்க ளில் தனது நேரத்தை வீணான பேச்சுக்களில் கழித்தல்.

- மினாவில் எரியப்படும் கற்களை முஸ்தலிபா வில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், எறிவதற்கு முன் கழுகிக் கொள்ள வேண்டும் என்றும் கருதுதல்.
- கல் எறிந்த பின் பிரார்த்தனையில் ஈடுபடாமல் சென்று விடல்.
- வயது பூர்த்தியாகாத, குறையுள்ள பிராணி களை அறுத்துப் பழியிடல். மேலும் அறுத்த பிராணிகளை உரியவர்களுக்கு கொடுக்காமல் எறிந்துவிடல்.
- அரபாவிலிருந்து சூரியன் மறையுமுன் வெளி யாகுதல்.
- முஸ்தலிபாவில் கிப்லாவை முன்னோக்காமல் தான் நினைத்தவாறு தொழுதல்.
- சூரியன் உதிக்குமுன் முஸ்தலிபாவிலிருந்து மினாவுக்கு சென்றுவிடல்.
- தனக்கு சக்தியிருந்தும் கற்களை தான் எறி யாமல் பிறரை எறியுமாறு பணித்தல்.
- பெரிய கற்கள், பாதனிகள் போன்றவைகளால் எறிதல்.
- பெருநாள் தினத்தன்று தனது முகத்தை சவ ரம் செய்து கொள்ளல்.
- ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிட மற்ற வர்களை நோவினை செய்தவாறு முண்டியடித் துக் கொண்டு செல்லல்.
- அக்கல்லை தொட்டு உடல் முழுவதும் தட விக் கொள்ளல்.
- க.்.பாவின் ஒவ்வொறு மூலைகளையும் சுவர் களையும் தொட்டு முத்தமிடல்.
- ருக்னுல் யமானி எனப்படும் கல்லை முத்த மிடல்.
- க.்.பாவை வலம் வரும்போது ஹிஜ்ர் இஸ்மா யில் எனப்படும் எல்லைக்குள்ளால் வலம் வருதல்.
- மினாவில் எல்லாத் தொழுகைகளையும் ஒரே நேரத்தில் தொழுதல்.
- கல் எறிபவர் மூன்றாவது, இரண்டாவது, முத லாவது என்ற அடிப்படையில் மாறி எறிதல்.
- எல்லாக் கற்களையும் ஒரேமுறையில் எறிந்து விடல்.

- பண்ணிரண்டாம்,பதிமூன்றாம் நாட்களில் தனது கடமையை முடித்துக் கொள்பவர்கள் மக்கா சென்று கடைசித்தவாபை செய்துவிட்டு, மீண் டும் மினா வந்து கல் எறிதல்.
- சைகைமூலம் க.்.பாவுக்கு பிரியாவிடை சொல் லல். மேலும் கடைசித் தவாபுக்குப்பின் மக்கா வில் தங்குதல்.
- நபியவர்களின் கப்றை தரிசிக்கச் செல்வது வணக்கம் எனக் கருதுதல்.

இவைகள் இன்றைய ஹாஜிகள் செய்து கொண்டிருக்கும் குறிப்பான சில தவறுகளாகும். எனவே இவைகளை தவிர்ந்து நபியவர்களின் வழி முறையைப் பின்பற்றி, சிறந்த முறையில் இக்கட மையை நிறை வேற்றியவர்களாக அல்லாஹ் நம்மனைவரையும் ஆக்கியருள்வானாக!.

**وصلى الله تعالى وسلم علىمحمد وآله وصحبه وسلم، والحمد لله رب العالمين.**